**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**CC.எண்**. 18/2023

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **செல்வம்** | தொழில் | : கூலிவேலை |
| தகப்பனார் பெயர் | : ராமலிங்கம் | கணவர் பெயர் | : –––––– |
| கிராமம் | : குப்பம்மாள்பட்டி | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 68 /2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 25.03.2025 |

**( எதிரி முருகேசன் ஆஜரில் உள்ளார்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் குப்பம்மாள்பட்டியில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் . கடந்த 2023 ம் வருடம் தேதி , மாதம் நினைவில்லை. எனது மகன் ஆறுமுகம் என்பவர் குப்பம்மாள்பட்டியில் உள்ள சிவன் கடைக்கு காலை சுமார் 08.00 மணியளவில் சென்றபோது, ஆஜர் எதிரி எனது மகனை கையார் அடித்து, கீழே தள்ளிவிட்டார். உன்னை கொன்றுவிடுவேன் என்று என் மகனை மிரட்டினார் . அப்போது அருகில் இருந்த நான், தடுக்க சென்றேன். சம்பவம் நடக்கும் போது செந்தில், மாடசாமி, மணிகண்டன் ஆகியோர்கள் உடன் இருந்தார்கள். சம்பவம் தொடர்பாக காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் . அந்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகாரை எழுதியவர் பெயர் விஜயன்

ஆகும், நான் சொல்லச்சொல்ல அவர் தான் புகாரை எழுதினார் . போலீசார் இது தொடர்பாக என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர் . எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்ததன் பேரில், குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

M SELVAM
Digitally signed by M SELVAM
Date: 2025.03.25 16:33:25 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.எண்**. 18/2023

**வழக்கு சாட்சி PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **ஆறுமுகம்** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : செல்வம் | கணவர் பெயர் | : –––––– |
| கிராமம் | : குப்பம்மாள்பட்டி | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 30 /2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 25.03.2025 |

**( எதிரி முருகேசன் ஆஜரில் உள்ளார் )**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் குப்பம்மாள்பட்டியில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் . அசா1 எனது தந்தை ஆவார் . சுமார் 1 ½ வருடங்களுக்கு முன்னதாக எங்கள் ஊர் குப்பம்மாள்பட்டியில் சிவன் என்பவரது கடையில் ஆஜர் எதிரி இருந்தபோது , சுமார் 08.30 மணிக்கு ஏன் என் மனைவியை சேர்த்து வைத்துக் கொண்டாய் என்று கேட்டேன் . அதற்கு ஆஜர் எதிரி என்னை அருவாளால் தலையில் கொத்தி விட்டார். எனக்கு இரத்தம் வந்தது . பின்னர் ஊர்க்காரர்கள் செந்தில் மற்றும் 4, 5 நபர்கள் வந்து தடுத்து விட்டார்கள் . நான் சிகிச்சைக்காக தாண்டிக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று சேர்ந்தேன். என் தந்தை அசா 1 இது தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் . போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜர். எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்ததன் பேரில், குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

M SELVAM Digitally signed by M SELVAM Date: 2025.03.25 16:33:32 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**CC.எண்**. 18/2023

**வழக்கு சாட்சி PW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **: செந்தில் குமார்** | தொழில் | : ஓட்டுநர் |
| தகப்பனார் பெயர் | : பாலகுரு | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : குப்பம்மாள்பட்டி | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 39 /2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 25.03.2025 |

**( எதிரி முருகேசன் ஆஜரில் உள்ளார் )**

**முதல் விசாரணை :**

நான் குப்பம்மாள்பட்டியில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் . அசா1, அசா2 எனது ஊர்க்காரர்கள் ஆவார்கள் . சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. சம்பவம் முடிந்த பின்னர் சம்பவ இடத்திற்கு வந்தேன். அப்போது ஆஜர் எதிரி அசா 1 செல்வம் என்பவரை அடித்ததாக சொன்னார்கள். சம்பவம் நடந்த இடம் எங்கள் ஊர் குப்பம்மாள்பட்டியில் உள்ள தண்ணீர் டேங்க்கின் அருகே நடந்ததாக சொன்னார்கள்.

**அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்ற அனுமதியுடன் மேற்கண்ட சாட்சி அரசுத் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

ஆஜர் எதிரி அசா 1 செல்வம் என்பவரையும், அசா2 ஆறுமுகம் என்பவரையும் அடித்ததை நான் நேரடியாக பார்த்தேன் என்றால்

சரியல்ல. சம்பவம் நடந்தது 18.11.2023 ம் தேதியன்று இரவு 08.30 மணிக்கு என்றால் சரிதான் . சிவன் பலசரக்குகடை முன்னார் நடந்தது என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும், எதிரிக்கு பயந்து அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்ததன் பேரில் , குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

M SELVAM Digitally signed by M SELVAM Date: 2025.03.25 16:33:39 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.